DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
**NAGAPATTINAM.**
**Sessions Case No. 7 / 2019**

Deposition of Witness for Prosecution : P.W. 4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கந்தவேல் | தந்தை பெயர் | : வடிவேல் |
| ஊர் | : ஊழியப்பத்து | தாலுக்கா | : காரைக்கால் |
| ஜாதி | : | வயது | : 46 |
| மதம் | : | தொழில் | : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 30.03.2021.

**முதல் விசாரணை**

நான் காரைக்கால் மாவட்டம், ஊழியப்பத்து கிராமத்தில், மேலத்தெருவில் என் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் விவசாய வேலை செய்துவருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன மகேந்திரன் என்பவா் என்னுடைய 2வது தம்பி ஆவாா். என் தம்பி மகேந்திரனின் மனைவி பெயா் கீதா ஆகும். மகேந்திரன்-கீதா தம்பதியினருக்கு கோமதி, அனுஷ்கா என்ற இரண்டு மகள்கள். ஆஜா் 2ம் எதிரிதான் மகேந்திரனின் மனைவி ஆவாா். எனக்கு ஆஜா் 1ம் எதிரியை தெரியும். மகேந்திரன் கொத்தனாா் வேலை செய்வாா், அந்த வேலை இல்லையென்றால் மீன்பிடிக்கும் தொழிலுக்கும் செல்வாா். மகேந்திரனுக்கு குடிபழக்கம் உள்ளது. மேற்படி மகேந்திரன் குடித்துவிட்டு ஆஜா் 2ம் எதிரியிடம் அடிக்கடி சண்டை போடுவாா். அவ்வாறு சண்டைபோடும் போது ஆஜா் 2ம் எதிரி கீதா எங்களிடம் வந்து சொல்வாா், நானும் என் தம்பியை கண்டித்து சமாதானம் செய்துவைப்பேன். சமாதானம் செய்யும்பொழுது சரியென்று சொல்லிவிட்டு என் தம்பி மகேந்திரன் மீண்டும் ஆஜா் 2ம் எதிரியிடம் சண்டை செய்வாா். ஆஜா்1 ம் எதிரி ஹரிஹரன் எங்கள் ஊா் படுகைத்தெருவில்தான் வசித்துவருகிறாா். ஆஜா் 1ம் எதிரி ஹரிஹரன் கொத்தனாா் வேலை செய்வாா், கொத்தனாா் வேலை இல்லையென்றால் மீன்படிக்கும் தொழில் செய்வாா். என் தம்பி மகேந்திரனும், ஆஜா் 1ம் எதிரி ஹரிஹரனும் நண்பா்கள். என் தம்பி மகேந்திரனும், ஆஜா் 1ம் எதிரியும் சோ்ந்துதான் வேலைக்கு செல்வாா்கள், ஊா்சுற்றுவாா்கள். அதனால் ஆஜா் 1ம் எதிரி என் தம்பி மகேந்திரன் வீட்டிற்கு அடிக்கடி வருவாா். அதனால் ஆஜா் 1ம் எதிரிக்கும், ஆஜா் 2ம் எதிரிக்கும் இடையில் தகாத உறவு ஏற்பட்டது. இவ்வழக்கு சம்பவத்திற்கு 3 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் ஆஜா் 2ம் எதிரியின் வீட்டிற்கு பின்புறம் ஆஜா் எதிரிகள் இருவரும் கட்டிபிடித்து கொண்டு இருப்பதை பாா்த்துவிட்டு என் அண்ணன் அ.சா.3 காா்த்திகேயன் என்னிடம் சொன்னாா். (இது செவிவழி சாட்சியம் என்று எதிரிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது, ஆட்சேபணைக்கு உட்பட்டு பதிவு செய்யப்படுகிறது). இதை என் தம்பி

மகேந்திரனிடம் என் அண்ணன் கார்த்திகேயன் சொன்னார், ஆனால் என் தம்பி மகேந்திரன் நம்பவில்லை, அதனால் அவர்களுக்குள் மனவருத்தம் ஏற்பட்டது. நானும் என் தம்பி மகேந்திரனை இதுசம்மந்தமாக கண்டித்துள்ளேன். அவ்வாறு நாங்கள் கண்டித்த பிறகும் ஆஜர் எதிரிகளின் உறவு தொடர்ந்து இருந்துவந்தது. கடந்த 11.02.2018 தேதி அன்று இரவு 9 மணி அளவில் என் வயலில் தண்ணீர் ஓடிகொண்டு இருந்தது. நான் ஆஜர் 2ம் எதிரியிடம் என் வயலில் தண்ணீர் பாய்ச்சிய பிறகு அவர்கள் வயலில் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளளாம் என்றும், அதற்கு டீசல் தயாராக வைத்துக்கொள்ளுமாறு சொன்னேன். அவ்வாறு டீசல் வாங்குவதற்காக நான் பயன்படுத்திய கேனை ஆஜர் 2ம் எதிரியிடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.4 கேன் தான் அவ்வாறு நான் ஆஜர் 2ம் எதிரியிடம் கொடுத்தேன். அவ்வாறு கொடுத்துவிட்டு நான் என் வயலுக்கு சென்றுவிட்டேன். அன்று இரவு சுமார் 10.45 மணி அளவில் நான் சாப்பிடுவதற்காக என்வீட்டிற்கு போவதற்காக வயலில் இருந்து மெயின்ரோட்டில் ஏறினேன். அங்கு ஆஜர் எதிரிகள் இருவரும் ஆஜர் 1ம் எதிரியின் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். ஆஜர் 2ம் எதிரியை இறக்கிவிட்டு மகேந்திரனை அழைத்துவருவதற்காக ஆஜர் 1ம் எதிரி சென்றுவிட்டார். நான் ஏன் அங்கு நிற்கிறாய் என்று ஆஜர் 2ம் எதிரியை கேட்டேன், அதற்கு அவர் மகேந்திரனை அழைத்துவர ஆஜர் 1ம் எதிரி சென்றுள்ளதாக சொன்னார். நான் என்வீட்டிற்கு செல்ல ரோட்டில் நடந்துகொண்டிருந்தேன். அப்போது மகேந்திரனும், ஆஜர் 1ம் எதிரியும் 1ம் எதிரியின் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அன்று இரவு 12-12.30 மணி அளவில் என் வயலில் தண்ணீர் எவ்வளவு தூரம் ஓடிஉள்ளது என்பதை பார்ப்பதற்காக என் வயலுக்கு சென்றேன். அங்கு மகேந்திரனின் வயலில் யாரோ ஒரு நபர் எரிந்தநிலையில் கிடந்ததை பார்த்தேன். அது யார் என்று தெரியவில்லை என்பதால் என் தம்பி மனோகரனுக்கு போன் செய்தேன். என் தம்பி மனோகரன் அங்கு இருக்க வேண்டாம் வீட்டிற்கு வந்துவிடுமாறு சொன்னதால் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் ஊரில் உள்ள அனைவரிடமும் தகவல் சொல்லி காலை சுமார் 5.45 மணி அளவில் அனைவரும் சென்று பார்த்தோம். அதுசமயம் பொழுது விடிந்திருந்தது. என் தம்பி மகேந்திரனுக்கு காலில் ஒரு விரல் இருக்காது. அதை வைத்து அவ்வாறு இறந்துகிடந்தது என் தம்பி என்று சொன்னார்கள், நானும் பார்த்தேன். என் தம்பி மகேந்திரன்தான் இறந்துகிடந்தார். நாங்கள் அனைவரும் அழுதுகொண்டிருந்தோம். இதுசம்மந்தமாக நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை, கிராம நிர்வாக அதிகாரிதான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இதுசம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

கடந்த 11.02.2018 தேதி அன்று இரவு 9 மணி அளவில் என் வயலில் தண்ணீர் ஓடிகொண்டு இருந்தது என்றும், நான் ஆஜர் 2ம் எதிரியிடம் என் வயலில் தண்ணீர் பாய்ச்சிய பிறகு அவர்கள் வயலில் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளளாம் என்றும், அதற்கு டீசல் தயாராக வைத்துக்கொள்ளுமாறு சொன்னேன் என்றும், அவ்வாறு டீசல் வாங்குவதற்காக நான் பயன்படுத்திய கேனை ஆஜர் 2ம் எதிரியிடம் கொடுத்தேன் என்றும், அவ்வாறு கொடுத்துவிட்டு நான் என் வயலுக்கு சென்றுவிட்டேன என்றும், அன்று இரவு சுமார் 10.45 மணி அளவில் நான் சாப்பிடுவதற்காக என் வீட்டிற்கு போவதற்காக வயலில் இருந்து

மெயின்ரோட்டில் ஏறினேன் என்றும், அங்கு ஆஜர் எதிரிகள் இருவரும் ஆஜர் 1ம் எதிரியின் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றும், ஆஜர் 2ம் எதிரியை இறக்கிவிட்டு மகேந்திரனை அழைத்துவருவதற்காக ஆஜர் 1ம் எதிரி சென்றுவிட்டார் என்றும், நான் ஏன் அங்கு நிற்கிறாய் என்று ஆஜர் 2ம் எதிரியை கேட்டேன் என்றும், அதற்கு அவர் மகேந்திரனை அழைத்துவர ஆஜர் 1ம் எதிரி சென்றுள்ளதாக சொன்னார் என்றும், நான் என்வீட்டிற்கு செல்ல ரோட்டில் நடந்துகொண்டிருந்தேன் என்றும், அப்போது மகேந்திரனும், ஆஜர் 1ம் எதிரியும் 1ம் எதிரியின் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றும் இந்த வழக்குமூல உற்பத்திற்காக ஆய்வாளர் அவர்களால் கற்பனையாக ஜோடிக்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் அன்றைய தேதியில் ஆஜர் 2ம் எதிரி வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றும், அவர்கள் வயலில் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள டீசல் வாங்க அவ்வாறு கேனை கொடுக்கவில்லை என்றும், அன்று இரவு ஆஜர் எதிரிகள் இருவரும் 1ம் எதிரியின் இருசக்கர வாகனத்தில் வயலுக்கு வரவில்லை என்றும், நான் அதுசமயம் ஆஜர் 2ம் எதிரியை ஒன்றும் கேட்கவில்லை என்றும், ஆஜர் 1ம் எதிரி மகேந்திரனை அழைத்துவர நான் சொல்வதுபோல் செல்லவில்லை என்றும், ஆஜர் 1ம் எதிரியும், மகேந்திரனும் இருசக்கர வாகனத்தில் வரவில்லை என்றும், நான் அந்த இடத்திற்கு போகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தம்பி மகேந்திரனுக்கு காலில் ஒரு விரல் இருக்காது என்றும், அதை பார்த்து இறந்தது மகேந்திரன்தான் என்று ஊர்ஜிதம் செய்தார்கள் என்றும், அதை நானும் பார்த்து இறந்தது மகேந்திரன்தான் என்று தெரிந்துகொண்டதாக போலீஸார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு முன்னேற்றத்திற்காக அவ்வாறு நான் ஊர்ஜிதம் செய்துகொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பி மகேந்திரனும், ஆஜர் 1ம் எதிரியும் ஒன்றாக வேலைக்கு போனதில்லை என்றும், ஆஜர் 1ம் எதிரி என் தம்பி மகேந்திரன் வீட்டிற்கு வந்ததில்லை என்றும், அதனால் ஆஜர் எதிரிகள் இருவருக்குள் எவ்வித தகாத உறவு இல்லையென்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ஆஜர் எதிரிகள் கட்டிப்பிடித்துகொண்டு இருந்ததாக என் அண்ணன் கார்த்திகேயன் என்னிடம் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பி மகேந்திரன் மதுஅருந்திவிட்டு ஆஜர் 2ம் எதிரியிடம் தினசரி தகராறு செய்வார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பி மகேந்திரனும், ஆஜர் 2ம் எதிரியும் ராசியாகத்தான் இருந்தார்கள் என்றும், அவர்கள் எந்த விசயத்தையும் எங்களிடம் சொல்லவில்லை என்றும், நாங்களும் நான் சொல்வதுபோல் கண்டிக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஆஜர் எதிரிகள் இருவரும் கட்டிப்பிடித்துக்கொண்டு இருந்ததாக சொல்வது எந்த தேதி, மாதம், வருடம் என்றால் தேதி, மாதம் தெரியவில்லை, ஆனால் இந்த வழக்கு சம்பவத்திற்கு 3 மாதங்களுக்கு முன்னால் நடைபெற்றது. அவ்வாறு 3 மாதங்களுக்கு முன்பு என்று குறிப்பிட்டு நான் போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் என் தம்பி மகேந்திரனை அவ்வாறு எந்த தேதி, மாதம் கண்டித்தேன் என்று நினைவில்லை என்றால் சரிதான். என் தம்பி மகேந்திரன்-ஆஜர் 2ம் எதிரி குடியிருந்தது கூரை வீடு என்றால் சரிதான். அந்த கூரை வீட்டில் ஒரு பகுதியில் என் பெற்றோர் குடியிருந்தார்கள்

என்றால் சரிதான். என் தம்பி கலையரசனும் அந்த கூரை வீட்டில் ஒரு பகுதியில் இருந்தார் என்றால் சரியல்ல. அந்த கூரை வீட்டில் சார்பு பகுதியில் ஆஜர் 2ம் எதிரியும், என் தம்பி மகேந்திரனும் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக நான் திட்டச்சேரி காவல்நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். என் தம்பி இறந்தது சம்மந்தமாக காவல்நிலையம் சென்று நாங்கள் புகார் கொடுக்காததற்கு தனிப்பட்ட காரணம் இல்லையென்றால் சரிதான், நாங்கள் வயலில் அழுதுகொண்டிருந்தோம். சம்பவ இடத்திற்கு போலீஸார் 8 மணிக்கு வந்து என்னை விசாரித்தார்களா என்றால் சரியல்ல, 10 மணிக்கு வந்து என்னை விசாரித்தார்கள். என் தங்கை இளஞ்சியம் திருமணத்திற்காக மகேந்திரன்-2ம் எதிரி தம்பதியினர் 13 சவரன் நகைகள் கொடுத்தார்கள் என்றும், அதை அவர்கள் திருப்பி கேட்டதால் எங்களுக்குள் மனவருத்தம் இருந்தது என்றால் சரியல்ல. நாங்கள் மகேந்திரனோடு பேச்சு வார்த்தையில் இல்லாமல் இருந்தோம் என்றும், நாங்கள் மகேந்திரனின் நிலத்தை அபகரித்துகொள்ள இருந்தோம் என்றும், அதுசம்மந்தமாக எங்களுக்குள் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. என் தம்பி மகேந்திரனின் இறப்பிற்கு சகோதரர்களாகிய நாங்கள்தான் காரணம் என்றும், அதனால்தான் நாங்கள் காவல்நிலையம் செல்ல துணியவில்லை என்றால் சரியல்ல. சம்பவ தேதி அன்று காலையிலேயே சந்தேகத்தின்பேரில் போலீஸார் சகோதரர்களாகிய எங்களை காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. அ.சா.பொ.4 கேனை அவ்வாறு ஆஜர் 2ம் எதிரியிடம் கொடுத்ததாக சொன்னதற்கு பிறகு இன்றுதான் மீண்டும் அதை பார்க்கிறேன் என்றால் ஆமாம். இரவு 12-12.30 மணி அளவில் நான் அவ்வாறு என் வயலில் எவ்வளவு தண்ணீர் ஓடிஉள்ளது என்பதை பார்ப்பதற்காக வயலுக்கு சென்றதாக போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 7 / 2019**

Deposition of Witness for Prosecution : P.W. 5

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : மதியழகன் | **தந்தை பெயர்** | : அருணாச்சலம் |
| **ஊர்** | : அருண்மொழித்தேவன் | **தாலுக்கா** | : நாகப்பட்டினம் |
| **ஜாதி** | : | **வயது** | : 49 |
| **மதம்** | : | தொழில் | : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 30.03.2021.

**முதல் விசாரணை**

நான் அருண்மொழித்தேவன் கீழத்தெருவில் குடியிருந்துவருகிறேன். நான் விவசாய கூலிவேலை செய்துவருகிறேன். கடந்த 12.02.2018 தேதி அன்று காலை 6-7 மணி அளவில் டீ அருந்துவதற்காக டீ கடைக்கு வந்தேன். அதுசமயம் நரிதின்னவாய்க்காலில் ஒரு நபர் எரிந்தநிலையில் இறந்து கிடப்பதாக பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பேரில் நானும், சுபாஷ் என்பவரும் அந்த இடத்திற்கு சென்றோம். அங்கு கூட்டமாக இருந்தார்கள். அங்கு வரப்பின்மீது ஒரு ஆண் பிரேதம் எரிந்தநிலையில் கிடந்தது. அதன்பிறகு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் போலீஸார் காலை 10-10.30 மணி அளவில் அங்கு வந்தார்கள். போலீஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் தயாரித்தார்கள், அதில் நானும், சுபாஷ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.8 ஆகும்**. அதன்பின்னர் போலீஸார் சம்பவ இடத்தில் இருந்து சிறிது ரத்தம் தோய்ந்த மண், சிறிது ரத்தம் தோயாத மண், நீலம் மற்றும் வெள்ளை நிறமுடைய கட்டம்போட்ட மேல்சட்டையின் எரிந்துபோன துண்டுகள், பாதி எரிந்தநிலையில் இருந்த 50 ரூபாய் நோட்டு ஒன்று ஆகியவற்றை கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், மேற்படி சுபாஷ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.9 ஆகும்.** அவ்வாறு கைப்பற்றப்பட்ட சிறிது ரத்தம் தோய்ந்த மண் **அ.சா.பொ.5 ஆகும்**, சிறிது ரத்தம் தோயாத மண் **அ.சா.பொ.6 ஆகும்**, நீலம் மற்றும் வெள்ளை நிறமுடைய கட்டம்போட்ட மேல்சட்டையின் எரிந்துபோன துண்டுகள் ஏற்கனவே அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, பாதி எரிந்தநிலையில் இருந்த 50 ரூபாய் நோட்டு **அ.சா.பொ.7 ஆகும்**. இதுசம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் வீட்டிற்கும், பிரேதம் இருந்த இடத்திற்கும் இடையில் சுமார் 4 கிலோமீட்டர் தூரம் இருக்குமா என்றால் இல்லை, 1-1/2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். ஊழியப்பத்து கிராமம் என்பது காரைக்கால் மாவட்டத்தை சேர்ந்தது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த மேற்படி இரண்டு ஆவணங்களையும் ஒரே போலீஸார் எழுதினார்களா அல்லது வேறுவேறு போலீஸார்கள் எழுதினார்களா என்றால் வேறுவேறு போலீஸார்கள் எழுதினார்கள். அவர்கள் எந்தநிலையில் உள்ள போலீஸார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சம்பவ இடத்தில் 10 நிமிடங்கள் இருந்திருப்பேனா என்றால் காலை 11 மணி வரை இருந்தேன். எனக்கு இந்த வழக்கில் சாட்சியமளித்துள்ள அ.சா.3 கார்த்திகேயன் என்னுடைய உறவினர் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.8 பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு நினைவுள்ளதா என்றால் நினைவுள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக நான் காவல்நிலையம் செல்லவில்லையா என்றால் இல்லை. நான் திட்டச்சேரி காவல்நிலையத்தின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆவணங்கள் திட்டச்சேரி காவல்நிலையத்தில் வைத்துதான் தயாரிக்கப்பட்டன என்றும், அதில் அங்குதான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் என் முன்னிலையில் எந்த சான்றுபொருளும் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் போலீஸார் சொல்லிகொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.